# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

தமிழர் கல்வி

# அரையாண்டு –மதிப்பீட்டுத் தாள்

# 2020 – 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................... நேரம்: 150 மணித்துளிகள்

TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெய் எழுத்துகள்

அ ) 30 ☐ ஆ ) 12 ☐

இ ) 18 ☐ ஈ ) 216 ☐

2. இசைக்கலை பற்றிக் கூறும் நூல்

அ ) சிலப்பதிகாரம் ☐ ஆ ) மணிமேகலை ☐

இ ) திருக்குறள் ☐ ஈ ) வளையாபதி ☐

3. கயிலைவன்னியன் _______ ஆண்டுகள் வன்னியை ஆட்சி செய்தான்.

அ ) 24 ☐ ஆ ) 44 ☐

இ ) 34 ☐ ஈ ) 54 ☐

4. சுடும் என்பது

அ ) அழிக்கும் ☐ ஆ ) காக்கும் ☐

இ ) மறைக்கும் ☐ ஈ ) வளர்க்கும் ☐

5. 'நீ மேசையிலிருக்கும் நூலை எடுத்துத் தா!' இச் சொல்லியம்

அ ) வினாச் சொல்லியம் ☐ ஆ ) ஏவற் சொல்லியம் ☐

இ ) மெய்ப்பாட்டுச்சொல்லியம் ☐ ஈ ) கூற்றுச்சொல்லியம் ☐

6. குரங்குகள் பலாக்கனிகள் பறிப்பதைக் கண்டவர்கள்

அ ) உழவர்கள் ☐ ஆ ) மீனவர்கள் ☐

இ ) வேடர்கள் ☐ ஈ ) புலவர்கள் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

7. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ ) ஏறிஏறி ☐ ஆ ) நறநற ☐

இ ) விறுவிறு ☐ ஈ ) புறுபுறு ☐

8. சேர மன்னனைக் காணவந்த புலவர்

அ ) ஔவையார் ☐ ஆ ) மோசிகீரனார் ☐

இ ) கபிலர் ☐ ஈ ) பரணர் ☐

9. நீர் வற்றிய குளம் ______________ வெடித்துக் காணப்பட்டது.

அ ) பாளம்பாளமாக ☐ ஆ ) அணிஅணியாக ☐

இ ) இன்பதுன்பமாக ☐ ஈ ) ஈடுஇணையாக ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

10. ஒற்றுமை நலன் தரும். என்பதை விளக்கும் பழமொழி

அ ) அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை. ☐

ஆ ) அடாது செய்தவர் படாது படுவர். ☐

இ ) இரக்கப் போனாலும் சிறக்கப் போ. ☐

ஈ ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ☐

11. அழுத பிள்ளை பால் குடிக்கும். இதில் அழுத என்பது

அ ) வினையெச்சம் ☐ ஆ ) பெயரெச்சம் ☐

இ ) வினைமுற்று ☐ ஈ ) குறிப்புவினை ☐

TEDC

12. திருகோணமலையைத் தலைநகராகக் கொண்டு, ஆட்சி செய்த மன்னன்

அ ) எல்லாளன் ☐ ஆ ) பண்டாரவன்னியன் ☐

இ ) சங்கிலியன் ☐ ஈ ) இராவணன் ☐

13. பெங்சூற்றர் கோட்டை அமைந்துள்ள இடம்

அ ) பனங்காமம் ☐ ஆ ) ஆனையிறவு ☐

இ ) வெற்றிலைக்கேணி ☐ ஈ ) பரந்தன் ☐

14. உண்டான் என்பதன் வினையெச்சம்

அ ) உண்டு ☐ ஆ ) உண்ட ☐

இ ) உண் ☐ ஈ ) உண்பி ☐

15. கதிரவனைக் கண்டு மலரும் மலர்

அ ) முல்லை ☐ ஆ ) மல்லிகை ☐

இ ) அல்லி ☐ ஈ ) சூரியகாந்தி ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

16. சேர மன்னன் கவரிவீசி புலவருக்குப் ____________ புரிந்தான்.

அ ) பனிவிடை ☐ ஆ ) பணிவிடை ☐

இ ) பநிவிடை ☐ ஈ ) பணிவ்விடை ☐

17. துளைக்கருவிக்கு எடுத்துக்காட்டு

அ ) புல்லாங்குழல் ☐ ஆ ) மேளம் ☐

TEDC

இ ) தாளம் ☐ ஈ ) வயலின் ☐

18. வீரமாமுனிவர் ____________ நாட்டைச் சேர்ந்தவர்.

அ ) இலங்கை ☐ ஆ ) இத்தாலி ☐

இ ) இந்தியா ☐ ஈ ) பிரான்சு ☐

19. வானம் + வில்

அ ) வானவில் ☐ ஆ ) வானம்வில் ☐

இ ) வான்வில் ☐ ஈ ) வானமில் ☐

20. ஒரு சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் இடம்

அ ) எழுவாய் ☐ ஆ ) பயனிலை ☐

இ ) செயப்படுபொருள் ☐ ஈ ) அடைமொழி ☐

21. அறிவுக்குப் பகையாக அமைவது

அ ) குணம் ☐ ஆ ) பணம் ☐

இ ) சினம் ☐ ஈ ) மணம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

22. அவன் அழகான வீட்டைக் கட்டினான். இதில் வந்துள்ள செயப்படுபொருள்

அ ) அவன் ☐ ஆ ) வீட்டை ☐

இ ) அழகான ☐ ஈ ) கட்டினான் ☐

TEDC

23. தடதட என்பது

அ ) இரட்டைக்கிளவி ☐ ஆ ) இணைமொழி ☐

இ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ ) அடுக்குத்தொடர் ☐

24. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி ____________ பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அ ) ஆறு ☐ ஆ ) ஐந்து ☐

இ ) நான்கு ☐ ஈ ) ஏழு ☐

25. வேழம் என்றால்

அ ) ஆண்யானை ☐ ஆ ) பெண்யானை ☐

இ ) ஆண்மான் ☐ ஈ ) பெண்மான் ☐

26. சென்றன என்பது

அ ) தன்மை ☐ ஆ ) முன்னிலை ☐

இ ) படர்க்கை ☐ ஈ ) ஒருமை ☐

27. கதிரமலை என்னும் இடத்தின் வேறுபெயர்

அ ) மன்னார் ☐ ஆ ) கந்தரோடை ☐

இ ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) பூநகரி ☐

28. பொரித்தல் என்பது

அ ) சினைப்பெயர் ☐ ஆ ) தொழிற்பெயர் ☐

இ ) காலப்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

29. வெள்ளத்தைச் சினத்துக்கு உவமையாகக் கூறியவர்

அ ) வள்ளுவர் ☐ ஆ ) ஔவையார் ☐

இ ) சிவப்பிரகாச அடிகள் ☐ ஈ ) பாரதியார் ☐

30. அல்லல் என்பதன் பொருள்

அ ) துன்பம் ☐ ஆ ) இன்பம் ☐

இ ) வயல் ☐ ஈ ) காட்சி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஆபிரகாம்லிங்கன் அமெரிக்காவில் வாழ்ந்தார். இவர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் நூல்கள் வாசிப்பதை மிகவும் விரும்பினார். இவர் பிறரிடம் நூல்களை வாங்கிப் படிப்பார். ஒருநாள், இவர் ஒரு பணக்காரரிடம் நூல் ஒன்றை வாங்கிப் படித்துக் கொண்டிருந்தார். இரவு நேரமாகியதால் அந்நூலைச் சாளரத்தின் அருகே வைத்துவிட்டு உறங்கி விட்டார். அன்று இரவு கடும் மழை பெய்தது. அவர் காலையில் எழுந்து பார்த்தபோது அந்நூல் நனைந்திருந்ததைக் கண்டார். அதனால், அவர் மிகவும் மனம் வருந்தினார். புதியநூல் வாங்கிக் கொடுப்பதற்குத் தன்னிடம் பணம் இல்லையே எனக் கவலைப்பட்டார். நூலைத் தந்தவரிடம் சென்று நடந்தவற்றைக் கூறினார். சிலநாட்கள் பணக்காரரிடம் வேலை செய்து, நூலுக்கான பணத்தைக் கொடுத்தார். இவ்வாறு நேர்மையாக வாழ்ந்த ஆபிரகாம்லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் ஆனார்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

1. ஆபிரகாம்லிங்கன் எதை மிகவும் விரும்பினார்?

2. ஆபிரகாம்லிங்கன் எங்கே வாழ்ந்தார்?

3. ஆபிரகாம்லிங்கன் கவலைப்பட்டது ஏன்?

TEDC

4. அவர் நூலுக்கான பணத்தை எவ்வாறு கொடுத்தார்?

5. ஆபிரகாம்லிங்கன் எப்படி வாழ்ந்தார்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சென்ற இடம் எல்லாம் சிறப்புப் பெறுபவர் யார்?

2. நல்லவருக்குச் செய்த உதவி எதில் செதுக்கிய எழுத்தைப் போல் நிலைத்து நிற்கும்?

3. பெரிய புளியங்குளத்தில் எத்தனை பிராமியக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. தமிழ்நாட்டில் ஐந்து இசைத்தூண்கள் உள்ள கோவிலின் பெயர் என்ன?

5. போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் எதிர்த்துப் போரிட்ட மன்னன் யார்?

TEDC

6. போர்க்களத்தில் கொட்டும் முரசின் பெயர் என்ன?

7. பொறாமை உடையவனிடம் எது வந்து சேர்வதில்லை?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## மழை

| | | |
|---|---|---|
| மழையும் | பூத்து | வாழ்வும் |
| முகிலும் | பாய்ந்தது | |

நீல வானம் இருண்டது
நெடிய ______________ திரண்டது
சீறிக் காற்றும் எழுந்தது
சேர்ந்து ______________ பொழிந்தது

ஆறாய் நீரும் ______________
அருவியாக எங்கும் பரந்தது
சேறாய் வயலும் நிறைந்தது
செந்நெல் ______________ச் சிரித்தது

வரண்ட செடிகள் தழைத்தன
வளமும் ______________ செழித்தன
இருண்ட வாழ்வு அகன்றது
எல்லோர் மனமுங் குளிர்ந்தது

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

உயர்திணை ____________________

முன்னிலை ____________________

பன்மை ____________________

2. பின்வரும் பெயரெச்சங்களை வினையெச்சங்களாக மாற்றி எழுதுக.

விழுந்த ____________

சென்ற ____________

பாடிய ____________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. ஆடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர் ________________________________

வினை ________________________________

4. பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் பெரிய கோட்டைகளை அழித்தான். இதில் எழுவாய், அடைமொழி, பயனிலை என்பவற்றைத் தருக.

TEDC

| எழுவாய் | அடைமொழி | பயனிலை |
|---|---|---|
| ____________ | ____________ | ____________ |

5. வினாச் சொல்லியத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

________________________________

________________________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

பனிகாலம் முடிந்துவிட்டது. பறவைகளின் ஒலிகள் கேட்கத் தொடங்குகின்றன. பற்றைகளில் இருந்து முயல்கள் வெளியே வருகின்றன. அவை தரையில் தாவித் தாவிப் பாய்கின்றன. மரங்கள் எல்லாம் தளிர்க்கின்றன. எங்கும் வண்ணவண்ண மலர்கள் மலர்கின்றன. கதிரவன் ஒளி உடலுக்கு மென்மையாக இருக்கின்றது. இலைதளிர்காலம் வந்துவிட்டது. சிறுவர்கள் மகிழ்ச்சியாக ஓடியாடி விளையாடுகின்றார்கள்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தலையைக் காத்த தமிழ்
- ✸ கயிலைவன்னியன்
- ✸ எனது தாயகம்

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC